# மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

# கும்முடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 66 / 2023 | காவல் நிலையம்: பாதிரிவேடு | |
| பெயர் : சுகந்தன் | அ.சா. 1 | நாள் : 11.08.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுகந்தன் | தாலுக்கா | : | -- |
| தந்தை பெயர் | : | செங்கல்வராயன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | மணலி | வயது | : | 46 |

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் மணலியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். கடந்த 15.07.2018ம் தேதி கண்ணன் கோட்டைக்கு நானும், எனது சகலையின் மகன், அவரது அம்மா, எனது மனைவி, எனது அக்கா ஆகியோர் சென்றிருந்தோம். எனது சகலை கிருஷ்டன் கண்ணன் கோட்டையில் தனது மகனுக்கு சங்கீதா என்பவரை திருமணம் செய்திருந்தார். ஆனால் அந்த பெண் வேறு ஒருவருடன் சென்று விட்டார். அதற்காக மத்திசம் பேச சென்றிருந்தோம். அங்கு சங்கீதாவின் அண்ணன் கத்தி கொண்டிருந்தார். பின்னர் சங்கிதாவின் அம்மாவும், கிருஷ்டனின் அம்மாவும் கத்தி கொண்டிருந்தார்கள். நான் அவர்களை மடக்கி சமாதானம் செய்தேன். அப்போது சங்கீதாவின் அண்ணன் கட்டை கொண்டு வந்து எனது தலையில் அடித்து விட்டார். சங்கீதாவின் கணவரான திருமலாவையும், அடித்து விட்டார். அதில் திருமலாவிற்கு 2 பற்கள் கொட்டிவிட்டது, காது மடல் கிழிந்துவிட்டது. எனக்கு இரத்தம் வந்ததால் நான் மயங்கி விழுந்துவிட்டேன். எனது அக்கா, மற்றும் எனது மனைவி என்னை மாதர்பாக்கம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து புகார் அளித்தார்கள். பின்னர் பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு நான் சிகிச்சைக்கு சென்றேன். எனக்கு 17 தையல் தலையில் போட்டார்கள். பின்னர் ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். 27 நாட்கள் நான் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். பின்னர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய பின்னரும் 3 நாளைக்கு ஒரு முறை ஸ்டான்லி அரசு

மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகாரில் திருமலை என்பவர் பெயர் அனுப்புநர் என குறிப்பிடப்பட்டுள்ளதாலும், ஆனால் அசா1 ன் கையொப்பம் உள்ளதாலும், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை பேரில் அசா 1ன் கையொப்பம் மட்டும் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியாது. எனது சொந்த ஊர் மணலி, வெள்ளிவாயல் சாவடி ஆகும். புகாரை நான் தான் கையொப்பம் இட்டு கொடுத்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 10 கிமீ தூரம் இருக்கும். இரு சக்கர வாகனத்தில் சென்றால் 10நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான். எந்த தேதியில் எந்த இடத்தில் சம்பவம் நடந்ததாக நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் வீட்டிற்கு 4 –5 நபர்களுடன் நான் தான் சென்றேன் என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு சென்றவுடன், நாங்கள் தான் தகாத வார்த்தையால் திட்டி, கொம்பு மற்றும் கையால் தாக்கி மிரட்டினோம் என்றால் சரியல்ல. எதிரி யார் என்று எனக்கு தெரியாது. அவரது அம்மாவை பற்றி தான் தெரியும். சங்கீதாவை நானும் எனது குடும்பத்தாரும் வரதட்சணை கொடுமை படுத்தி அடித்து துரத்தினோம் என்றால் சரியல்ல. அதனால் சங்கீதா கணவர் வீட்டை விட்டு தாய் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. வீட்டிற்கு வருமாறு சங்கீதாவை நான் கையை பிடித்து இழுத்தேன் என்றால் சரியல்ல. மாதர்பாக்கத்திலுள்ள அங்கையா என்ற மருத்துவரிடம் நான் முதலுதவி சிகிச்சைக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் மட்டும் தான் சிகிச்சையில் இருந்ததாக மருத்துவர் சான்று அளித்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு மண்டை ஓட்டில் எவ்வித காயமும் இல்லை என மருத்துவர் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் கட்டை, கம்பு, கற்கள் இருந்தது என்றால் சரிதான். நான் சங்கீதாவை பிடித்து இழுத்த போது ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் நான் கீழே விழுந்து எனக்கு அடிப்பட்டது என்றால் சரியல்ல. நான் கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்தை எதிரி தாக்கியதால் ஏற்பட்டது என

பொய் சா ட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சங்கீதாவை வீட்டை விட்டு துரத்தி விட்டு அவர் ஓடி போனதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, சங்கீதா வாழாமல் போனதற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. மேற்படி பழி என் மீது வந்துவிடும் என்ற பயத்தில் எதிரி மீது ஒரு தவறான புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலம், மருத்துவரின் ஆதாரம் மற்றும் முதல் தகவல் அறிக்கை முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– சுகந்தன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,

Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L.,
Date: 2025.08.11 15:24:21 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி